செ.வெ.எண்.102 நாள்.20.02.2018.

# உணவு பாதுகாப்பு மாவட்ட வழிகாட்டுதல் கூட்டம்.

உணவு பாதுகாப்புத்துறை ஆணையர் அமுதா அவர்கள் உத்தரவின்பேரில், திருநெல்வேலி மாவட்ட உணவு பாதுகாப்பு சிறப்பு வழிகாட்டுதல் குழு கூட்டம், மாவட்ட ஆட்சியர் சந்தீப் நந்தூரி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் திருநெல்வேலி உணவு பாதுகாப்பு (ம) மருந்து நிர்வாகத்துறை மாவட்ட நியமன அலுவலர் V.செந்தில்குமார், மாநகராட்சி சுகாதார அலுவலர் S.பொற்செல்வன், சங்கரன்கோவில் சுகாதாரப்பணிகள் துணை இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட மாவட்ட திட்ட அலுவலர், சங்கரன்கோவில், விக்கிரமசிங்கபுரம், புளியங்குடி, தென்காசி, கடையநல்லூர் நகராட்சி ஆணையாளர்கள் திருநெல்வேலி தெற்கு மாவட்ட வணிகர் சங்க தலைவர் P.D.P.சின்னதுரை, உணவக வணிகர் சங்க பொருளாளர் A. மணிகண்டன், நுகர்வோர் பாதுகாப்பு கூட்டமைப்பு தலைவர் G. வெங்கடாசலம், .மற்றும் மாவட்டத்திலுள்ள அனைத்து உணவு பாதுகாப்பு அலுவலர்களும் கலந்துகொண்டனர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் உணவு பாதுகாப்புத் துறையின் கீழ் எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்து மாவட்ட நியமன அலுவலர் மரு.செந்தில்குமார் விளக்கினார். பாதுகாப்பான உணவு அனைவருக்கும் கிடைத்திட வழிவகை செய்வதே உணவு பாதுகாப்புச் சட்டத்தின் நோக்கம் என்பதை மாவட்ட ஆட்சியர் சந்தீப் நந்தூரி வலியுறுத்தி, உணவு வணிகர்கள் கடைபிடிக்க வேண்டிய உணவு பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து விளக்கினார். சிறு வியாபாரிகள் பதிவுச்சான்றுகளை அருகிலுள்ள பொதுசேவை மையம் மூலமும் விண்ணப்பித்து உடனடியாக பெற்றுக்கொள்ளலாம். மேலும் கட்டணத்தை ஆன்லைன் மூலமாகவும் செலுத்தலாம். மாவட்டத்திலுள்ள அனைத்து உணவு வணிகர்களும், ஆண்டொன்றிற்கு, ரூபாய் பன்னிரண்டு லட்சத்திற்கு மேல் விற்று முதல் உடையவர்கள் மாநில உரிமம் பெற்றும், ரூபாய் பன்னிரண்டு லட்சத்திற்கு குறைவாக விற்று முதல் உடைய உணவு வணிகர்கள் பதிவு சான்று பெற வேண்டும். பாதுகாப்பான உணவு வழங்கும் வகையில், உணவுத்தொழில் நடத்துவதை கட்டாயமாக்கவும், உரிமம் பெறாதவர்கள் மீது உணவுப்

பாதுகாப்புத்துறையினர் மூலம் எடுக்கப்படும் நீதிமன்ற நடவடிக்கைகளை உணவு வணிகர்கள் தவிர்த்துக்கொள்ள்வும், மறுசுழற்சிக்குப் பயன்படாத ப்ளாஸ்டிக் பொருட்களை முற்றிலும் தவிர்க்கவும், மறுசுழற்சிக்கு பயன்படும் ப்ளாஸ்டிக் பயன்படுத்தினால், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களில் அனுமதி பெற்று பயன்படுத்தவும், ப்ளாஸ்டிக் ஒழிப்பிற்கு உணவு வணிகர்கள் முழு ஒத்துழைப்பு நல்கிடவும், அதனை உணவு பாதுகாப்புத்துறையினர் உறுதிப்படுத்திடவும் அறிவுறுத்தினார். மேலும், மாவட்டத்திலுள்ள சத்துணவு மையங்கள், அங்கன்வாடி மையங்களில் தயாரிக்கப்படும் உணவின் தரத்தை உறுதிசெய்ய, ஒவ்வொரு மாதமும், உணவு பாதுகாப்புத்துறை அலுவலர்கள் மூலம், உணவு மாதிரிகள் எடுத்து அனுப்பவும் அறிவுறுத்தினார். உணவு பாதுகாப்பு துறையில் இணையதள சேவையில் ஏற்பட்ட குறைபாட்டினால் சரியான நேரத்தில் புதுப்பிக்காத உணவு வணிகர்கள் மார்ச்-31 வரை புதுப்பித்துக்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், மாவட்டத்தில் பான்மசாலா மற்றும் குட்கா போன்ற போதைப் பொருட்கள் விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் அதனை உடனே தடை செய்ய வேண்டும். மேலும், உணவு பாதுகாப்பு சம்பந்தமான புகார்களுக்கு whatsapp complaint 9444042322 மூலம் பதிவேற்றம் செய்யலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.